27—

சுற்றுலாத் தலம்

***30838—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் வைதேகி அருவி, கோவைக் குற்றாலம் ஆகியவற்றைச் சுற்றுலாத் தலங்களாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* குமரி மாவட்டத்தில் உள்ள வைதேகி அருவியை மேம்பாடு செய்வது தொடர்பாக திட்டக் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கோவைக் குற்றால மேம்பாட்டுப் பணிக்காக இதுவரை 104.61 இலட்ச ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி

திரு. செ.ம. வேலுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையினுடைய வைதேகி அருவி, கோவைக் குற்றாலம் ஆகிய இடங்கள் ஆண்டு முழுவதும் நீர் வரத்து உள்ள பகுதிகள். இவை சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய பகுதிகள். தற்போது வைதேகி அருவிக்குச் செல்லக்கூடிய சுற்றுலாப் பயணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே செல்லக்கூடாது என்று 2½ கி.மீ. தூரம் சாலை அமைக்கப்பட்டால் வைதேகி அருவிக்கு செல்வதற்கு வழி இருக்கும். அதேபோன்று கோவைக் குற்றாலத்திற்கு ரோப் கார் அமைக்கக்கூடிய பணி பரிசீலனையில் இருப்பதாக அறிகின்றேன். எனவே, இதை அரசு செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைதேகி அருவியைப் பொறுத்தமட்டில் கோவை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே கருத்துரு கேட்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலம் அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டால், நிச்சயமாக உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்படும். கோவைக் குற்றாலத்தைப் பொறுத்தமட்டில் அடிப்படைத் தேவைகளில் 50 சதவிகிதப் பணிகள் நடந்து முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள 50 சதவிகிதப் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

முற்பகல் 10-20

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, என்னுடைய தொகுதியில் சூலூரில் உள்ள பொதுப் பணித் துறை குளத்தில் சுற்றுலாத் துறைமூலமாகப் படகுத் துறை அமைக்கக்கூடிய பணி தற்போது தாமதம் இல்லாமல் இருக்கிறது. அதைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட காலமாக கோவை மாவட்ட மக்கள் வைத்துள்ள கோரிக்கை ஆண்டு முழுவதும் நீர் வரத்து இருக்கக்கூடிய கோவைக் குற்றாலம், வைதேகி நீர்வீழ்ச்சியிலிருந்து வரக்கூடிய நீரை சிறுவாணி வழியாக அனுப்புவதன் மூலமாக கோவை நகரிலும், கோவைப் பகுதியில் இருக்கின்ற சூலூர் போன்ற நகரங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்வதற்கு வழி இருக்கும் என்ற உணர்வைத் தெரிவித்து, அதை இந்த அரசு செய்யுமா என்று தங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கோவை மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகளை இந்தத் துறையின் சார்பாக மேம்படுத்த வேண்டுமென்று கருத்துரு கேட்கப்பட்டிருக்கிறது. கருத்துரு வந்தவுடன் உடனடியாக நிறைவேற்றப்படும். இருந்தாலும்கூட,

[2008 நவம்பர் 13

கோவை மாவட்டத்தினுடைய வளர்ச்சியையும், அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே இந்தக் கருத்தைத் தெரிவித்ததன் அடிப்படையில், கோவை மாவட்டத்திற்கென்று தனியாகச் சுற்றுலா அலுவலகம் அமைத்து சுற்றுலா அலுவலரையும் நியமிப்பதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். சுற்றுலா அலுவலர் நியமிக்கப்பட்டு, சுற்றுலா அலுவலகம் இன்னும் 15 நாட்களில் கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியில் சக்திவாய்ந்த, புனிதமான அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயம் அமைந்துள்ளது. சமீபத்தில்கூட அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். சோளிங்கரில் ரோப் கார் பணி அமைக்கின்றபட்சத்தில் சோளிங்கரைச் சுற்றுலாத் தலமாக அறிவித்தால் அங்கே ஏராளமான பக்தர்கள் வருகின்றபோது அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் பெருகி சுற்றுலாவுக்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். இந்தச் சூழ்நிலையில் இதை அரசு கவனத்தில் கொண்டு—அதேபோல, கார்த்திகை மாதம் விரைவில் வரவிருக்கின்றது; அங்கே ஒரு ஐதீகம் உண்டு; கார்த்திகை மாதத்திலே யோக நரசிம்மர் கண் திறந்திருப்பார்; அந்த நேரத்திலே அவரைப் போய் தரிசித்தால் கேட்டதெல்லாம் கிடைக்கும் என்று சொல்வார்கள்—இதையும் மனதில்கொண்டு, உடனடியாக அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தையுமே சுற்றுலாத் தலம் என்று அரசு அறிவிப்பதில்லை. சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாக இருந்தால், அதைக் கருத்தில்கொண்டு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அரசு பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூர் பேரூராட்சிக்கு அருகில் தென்பெண்ணை ஆற்றின் நதியோரம் அதுல்யநாதேஸ்வரர் ஆலயம் என்று மிகப் பெரிய ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்தின் அருகே மிகப் பெரிய தாமரைக் குளம் இருக்கிறது. அதன் நிலப் பரப்பு அதிகமாக இருக்கின்றது. அந்த அதுல்யநாதேஸ்வரர் கோயிலைச் சுற்றி கிட்டத்தட்ட 50 ஏக்கர் நிலங்களும் இருக்கின்றன. அதைச் சுற்றி ஒரு பூங்கா அமைத்து, அந்தக் கோயிலையும் சீர்செய்து, மக்கள் விரும்புகின்ற அந்த இடத்தை மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பொறுத்தமட்டில் இவை எங்களுடைய துறை சார்ந்த பணிகள் அல்ல. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் நாங்களும் அறநிலையத் துறைக்கு, உறுப்பினருடைய கருத்துகளை எடுத்து வைப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அச்சரப்பாக்கம் தொகுதியில் இடைக்கழிநாடு பேரூராட்சியில் முதலியார்குப்பத்தில் 'மழைத் துளி படகு இல்லம், என்கிற படகுக் குழாம், மக்கள் பெரிதும் பயன்படுத்துகிற இடமாக அமைந்திருக்கிறது. இங்கு பல்வேறு வகையான புதிய புதிய படகுகள், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இரண்டு ஆண்டுகளாக விடப்பட்டு வருகின்றன. இந்த முதலியார்குப்பத்தில் உள்ள மழைத் துளி படகு இல்லத்தை மேலும் வசதி படைத்ததாக ஆக்கி, உல்லாசப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை மேலும் செய்து கொடுத்தால், அது ஒரு மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக அமையும். அரசுக்கு மிகுந்த வருவாய் ஈட்டித் தரும்.

மக்களுக்கும் பொழுதுபோக்காக அமையும். ஆகவே, இந்த முதலியார்குப்பம் படகு இல்லத்தைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலியார்குப்பத்தைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அங்கே வருகைதந்து இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கின்றார்கள். தலைவர் கலைஞருடைய அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு பணிகள் நடைபெற்று, மக்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு முதலியார்குப்பம் ஏரி இப்போது பயன்பாட்டில் இருக்கின்றது. அங்கே வருகின்ற பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், மேலும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பணிகளை மேற்கொள்வதுபற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது. வருகிற நிதியாண்டில் நிதிநிலையைப் பொறுத்து, பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக்கோட்டை சரித்திரப் புகழ்வாய்ந்த ஒரு கோட்டையாகும். அது இப்போது சீரழிந்து பராமரிப்பு இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், சமூக விரோதிகளினுடைய கூடாரமாக இப்போது அது மாறிக்கொண்டு வருகிறது. பத்திரிகையிலே அத்தகைய செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அதைப் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல், பல ஆண்டுக் காலமாக ஒரு கோரிக்கை இருக்கிறது. அங்கே இராஜா கோட்டையையும், இராணி கோட்டையையும் இணைத்து, ஒரு விஞ்ச் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது அந்தச் சுற்றுலாத் தலத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும். அது தொல்லியல் துறையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால், மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றைக்கு

2008 நவம்பர் 13]

மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆகவே, அந்த அனுமதியைப் பெற்று அதை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக்கோட்டையைப் பொறுத்தமட்டில், மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. Archaeological Department-இன் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இருந்தாலும்கூட, அங்கே அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று அரசால் திட்டங்கள் தீட்டப்பட்டு, அவை மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றன. நிச்சயமாக அனுமதியைப் பெற்று, அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சுற்றுலாத் துறைமூலம் அடிப்படைத் தேவைகளைச் செய்வதற்கு எவ்வளவு நிதி, எத்தனை பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் ஏற்கெனவே படகுக் குழாம், பிரதான ஜி.எஸ்.டி. சாலையிலே நுழைவாயில் அமைக்கப்பட்டு, அங்கே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக அந்தப் படகுக் குழாம் வசதி நிறுத்தப்பட்டுவிட்டது. மீண்டும் அந்தப் படகுக் குழாமைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா? இந்தப் பகுதியிலே வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு மிகப் பெரிய ஏமாற்றம். இன்னும் 47 கிலோ மீட்டர் சென்றால் முதலியார்குப்பம் படகுக் குழாமில் சவாரி செய்யலாம் என்கிற அறிவிப்பு அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இது அந்தப் பகுதியிலே வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு மிக்க வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. எனவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மீண்டும் படகுக் குழாமை செங்கல்பட்டு கொளவாய் ஏரியிலே அமைப்பதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு ஏரியைப் பொறுத்தமட்டில் படகுக் குழாம் அமைப்பது ஒரு பெரிய வேலை இல்லை. படகுக் குழாம் அமைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். பயணிகள் அதிகமாக வந்தால் தொடர்ந்து அது நிறைவேற்றப்படும். பயணிகள் வருகைக் குறைவின் காரணமாகத்தான் முதலியார்குப்பம் பகுதிக்கு மாற்றப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், அதிக பயணிகள் வருவதாக இருந்தால், அதைக் கருத்தில்கொண்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

28—

ஆய்வுக் கூடம்

***31019—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளச்சல் தொகுதி, ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்ட நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் திட்டம் 10-ல் விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈத்தாமொழி அரசு மேல்நிலைப் பள்ளி கிராமப்புற மாணவர்கள் படிக்கக்கூடிய ஒரு பள்ளி.